**பொதுக்காலத்தின் 3ஆம் ஞாயிறு ”A” ஆண்டு**

**வாசகங்கள்:**

**முதல் வாசகம் : எசா 8: 23-9:1-3**
**இரண்டாம் வாசகம்: 1 கொரி 10: 13-17**
**நற்செய்தி வாசகம்: மத் 4:12-23**

**”இருளிலிருந்து அவைரும் ஒளிக்குள் நுழைந்திட கிறிஸ்து விடுக்கும் அழைப்பு -**

**முன்னுரை:**

**பல ஆண்டுகளுக்கு முன் ஒரு சர்க்கஸ் கம்பெனியில் பணியாற்றும் இளைஞர் ஒருவர் பெரியதொரு சாகசம் செய்ய விரும்பி அதற்காகப் பலநாட்கள் தனனை தயாரித்துக் கொண்டு வந்தார். குறிப்பிட்ட நாளும் வந்தது களத்திற்கு வந்த அவரை அச்சம் ஆட்கொண்டது. ட்ரப்பீஸ் (அதாவது ஊஞ்சல் போன்ற அமைப்பு கொண்ட இருபுறமும கயிறுகளால் பிணைக்கப்பட்ட பலகை போன்ற அமைப்பு. அதன் மூலம் மறுபுறம் உள்ளவரின் பலகைக்குத் தாவுதல்). அந்த இளைஞன் தன் கரங்களை கயிற்றிலிருந்து விடுவித்துக் கொண்ட அந்ம இளைஞருக்கு தன்னால் எதிர்புறத்தில் உள்ள ஊஞ்சலை அடைய முடியாது என்பது தெரிந்தது அவர் நிலையைக் கண்ட சர்க்கஸைக் கண்டுக் களிக்க வந்தக் கூட்டம் பயத்தில் பெருமூச்சு விட்டது. ஆனால் அவன் விழுந்தபோது அவனது காலடியில் விரிக்கப்பட்டிருந்த உறுதியான. நிரைலயாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வலையொன்று அந்த இறைஞரைத் தாங்கிக் கொண்டது.**

**இன்றைய நற்செய்தியில் இயேசு தான் திருத்தூதர்களாகத் தேர்ந்துக் கொள்ள விரும்பிய சீடர்களுக்கு தங்கள் வாழ்வாதாரமாக விளங்கிய படகுகளை, வலைகளை, தங்கள் குடும்பங்கை அதன் அன்றாட வாழ்வியலை விட்டுவிட்டு அவர் பின்னே அடியெடுத்து வைக்க அழைக்கிறார். அவர்களும் தாங்கள் அதுவரை அறியாததொரு வாழ்க்கைக்குள் தங்களைப் பிதைத்துக் கொளள அடியெடுத்து கைக்கிறார்கள். ஏனெனில் அவர் தங்களைத் தாங்கிப் பிடித்துக் காப்பாற்றக் கூடிய இறைவனின் உடனிருப்பை, அவரது வழிநடத்துதலை, அவரது அன்பை முழுமையாக நம்பினார்கள்.**

**இன்று அதே இறைவன் நம் முன்னே நின்றுக்கொண்டு அவரது ஒளியில் நடக்க நமக்கு அழைப்பு விடுக்கிறார். நம்மைச் சூழ்ந்துக் கொண்டு பிணைத்து வைத்துக் கொண்டிருக்கும் இருளை ஒதுக்கி விட்டு வெளியே வர, நமக்கு பாதுகாப்பான வலையாக இரக்கக் கூடிய நம்மை அழைத்தவரின் அருளைளில் நம்பிக்கை வைத்து அவரைப் பின் சென்றிட அழைக்கிறார். அவரது இந்த அழைப்பை ஏற்றுக் கொள்ள நம்மை நாமே தயாரித்துக் கொள்வோம்.**

**மறையுரை:**
**”ஒளியைப் பின்பற்றி நடப்போம் - அனைவரும் இணைந்து பயணிக்க அழைக்கப்பட்டுள்ளோம்”**

**சில ஆண்டுகளுக்கு முன் நான் ஒரு கதையைப் படித்தேன். அந்தக் கதை ஒரு சர்க்கஸ் கலைஞரைக் குறித்தக் கதை. பல தலைமுறைகளாக சர்க்கஸ் கலையை செய்துக் காட்டிய குடுமபத்தை சார்ந்தவர் அவர். அவரும் தன் முன்னோர்களைப் பேல ட்ரர்ரீஸ் சாகச விளையாட்டை ஆடும் கலைஞராக வேண்டும் என்று விரும்பினார். சிறு வயதிலிருந்தே அவரது தந்தை சர்க்கஸ் கலைக்கூடத்திற்கு அவரை அழைத்துச் சென்று தனது மூத்த மகனின், அதாவது அந்த நபரின் மூத்த சகோதரரின் கரங்களைப் பற்றிக் கொண்டு அந்த சாகசத்தை பத்திரமாகக் கற்றக் கொள்ள கூறினார். குறிப்பிட்ட நாளில் அவர் முதன் முதலாக அந்த சாகசத்தை செய்ய வேண்டிய நாளில. அவரது கண்கள் கட்டப்பட்டிருந்தன. அவர் தனியாக தன் ஊஞ்சலிலிருந்து அவரது அண்ணனிடம் தாவ வேண்டும். எதிலில் அவரது அண்ணன் அவரைப் பிடித்துக் கொள்ள தயாராக இருந்தார். ஆனால் தாவி பாதி வழி சென்ற போது அவரை அச்சம் ஆட்கொண்டது. சாகசத்தைப் பார்த்துக் கொண்டிருந்த மக்களையும் பயம் சூழ்ந்துக கொண்டது. அவர் விழுந்துவிடுவார் என்று எண்ணி பதற்றத்தோடு அனைவரும் இருக்கையில் அவரது தந்தை திடீரென ஒரு பெரிய வலையை விரித்துப் பிடிக்கவே அந்த இளைஞர் தப்பிப் பிழைத்தார்.**

**இப்படிப்பட்ட சவால்கள் சாகசங்கள் நிறைந்ததுதான் மனித வாழ்வும். நாமும் பல வேளைகளில் ஆபத்துகளை சந்திக்கிறோம், நாம் அறியாத பலவற்றஜல் கால் பதிக்க நேரிடுகிறது, சில வேளைகளில் வீழ்ச்சியடைந்து விடுவோமா என்ற பீதி நம்மைப் பீடிக்கிறது. ஆனால் நம்மைப்**

பராமரித்துக் காக்கும் நம் இறைவன் இயேசு கிறிஸ்துவின் வழியாகவும், நம் திருஅவையின் வாயிலாகவும் நம்மைப் பாதுகாக்க வலுவான வலையை நமக்கு வழங்கியிருக்கிறார். நாம் வீழ்ந்துவிடுவோமோ என்ற நிமைல ஏற்படும் போதெல்லாம் நமது ஆண்டவர் இயேசுவும் நமது திருஅவையம் நம்மைப் பற்றிப்பிடித்துக் காப்பாற்றுகிறர்கள்.

1. ''இணைந்து பயணித்தல்''

நமது வாழ்வின் பல சந்தர்ப்பங்களில் நாம் ''நான் எப்படித் துவங்கப் போகிறேன்'' என்றுக் கேட்டுக் கொண்டுத்தான் இருக்கிறோம். நாம் எப்படித் துவங்கப் போகிறோம் என்பது ஒரு பெரிய கேள்வியாக புதிராகவே உள்ளது. நாம் தவறான துவகத்தில் பயணத்தை ஆரம்பிக்கும் போது அந்தப் பயணம் கடினமானதாகவும், சில வேளைகளில் முழுவதும் முடிக்க .இயலாததாகவும் கூட ஆகிவிடக்கூடும். கடந்த ஆண்டு எரிவாயுக்காக விலைக் குறித்து எடுககபபட்ட முடிவு வெகுவிரைவில் முறியடிக்கப்பட்டு கவிழ்ந்து விட்டதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். சரியான கவனம் இன்றித் துவக்கும் எச்செயலும் அனைத்தையும் குலைத்துவிடும். இதைத்தான் ''சரியான துவக்கம் பாதி வெற்றிக்கு சமம்'' என்பர்.

இன்றைய நற்செய்திப் பகுதி இடீயசுவின மறைப்பணியின் / அவரத பொது வாழ்வின் துவக்கப் பகுதியாக உள்ளது. இயேசு தனதுப் பணியை நகரின் முக்கியமான மையப்பகுதிகளிலிருந்து ஆரம்பிக்கவில்லை மாறாக சாமான்ய மக்கள் வாழும் பகுதியான கலிலேயாவிலிருந்து துவங்குகிறார். அவரது பணியின் பகுதியில் வாழ்ந்தவர்கள் எளிய மீனவர்கள். அன்றாட வாழ்வின் எதார்த்தத்தை உணர்ந்தவர்கள். அவர்கள் தங்கள் சுக துக்கங்களை ஒருவரோடொருவர் பகிர்ந்துக் கொள்பவர்கள். இதையே இரண்டாம் வத்திக்கான் சங்கமும் மிக அழகாக எடுத்துரைக்கிறது ''இன்றைய மளிதரின் மகிழ்ச்சிகளும், நம்பிக்கைகளும் அவர்களது துயரங்கள், கவலைகளும் இயேசுவின் திருத்தூதரின் மகிழ்ச்சிகளும், நம்பிக்கைகளும் அவர்களது துயரங்கள், கவலைகளுமாக இருந்தன. ''மனிதமற்ற எதுவும் மனழதரின் இதயத்தில் எதிரொலிப்பதில்லை''

இயேசு தம் சீடராகத் தேர்ந்துக் கொண்டவர்கள் குழுவாக இணைந்து இருப்பவர்களையே மீன்பிடித்தொழில் மனிதர்கள் கூட்டாக இணைந்து செய்யக் கூடியத்தொழிலே. திரு அவையைக் கட்டி எழுப்புவதும் அத்தகையக் கூட்டு முயற்சியே. இயேசு தம்மோடு இணைந்துப் பயணிக்க இத்தகைய இணைந்து வாழும் மனிதர்களையே தேர்ந்துக் கொள்கிறார். இணைந்து பயணித்து, தங்கள் கவனத்தை சிதறடிக்காமல் ஒருவருக்கொருவர் உறையாடி, உரையாடி, விவாதித்து ஒருவர் மற்றவர் கருத்தை ஏற்று வாழக்கூடியவர்களையே தம் சீடராக தேர்ந்துக் கொள்கிறார். இதுவே சினடாலிடி அதாவர் இணைந்துப் பயணித்தல் என்பதன் சாரம்ட சினடாலிடி (Synodality) என்பது syn +odos என்னும் இரு வார்த்தைகளிலிருந்து அதாவது ''ஒரே பாதையில் பயணித்தல்'' என்றப் பொருள்படும் சினடாலிட்டி உருவாக்கம் பெற்றது. திருஅவை கூட்டாக இயங்கிப் பயணிக்கக் கூடியதொன்றாகவே வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த ஒர பாதையில் பயணிக்கத் துவங்கும் இந்த முயற்சி ஒரு கிறிஸ்துவரும் தனியாக பயணிக்க/ இயங்கக் கூடியவர் அல்ல என்தையே சுட்டிக் காட்டுகிறது.

2. மனமாறுங்கள் ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது:

இயேசுவின் செய்தி எளிமையாக இருந்தாலும் அது ஆழமானதானது. மனமாறுங்கள் ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது என்ற இந்த செய்தியை தமது போதனைகள, உவமைகள் வாயிலாகலும் தம் சீடர்களின் வாயிலாக அறிக்கையிடச் செய்ததன் ' மூலம் செய்தியை சுடடிக்காட்டி அதைப் பரவலாக்கினார். ''லிண்ணரசு நெருங்கி வந்துவிட்டது என்பதன் பொருள் என்ன?'' என்றுப் பார்ப்போமானால் அது கடவுளின் ஆளுமையை, கடவுள் அரசாட்சி என்பது பொருளாகிறது. அதையே இயேச தமது திருவாய்மொழிந்தருளினார் என்றால் ''இறைவனின் அரசாமடசி துவங்கிவிட்டது'' என்றாகிறது. கடவுளே அனைத்தைம் தம் கரங்களில் எடுத்துக் கொண்டு அதை நடப்பிக்கிறார். வாழ்விற்கு உயிர்ப்பை, கீழ்ப்படிதலை, அருங்குறிகளை. அக்கறையை இவ்வுலகில் நிலவிடச செய்கிறார்.

இஜரயேல் மக்களுக்கு இது ஒரு புரட்சிகரமானக் கருத்தாக உள்ளது. அவர்கள் பல நூறந்றாண்டுகளாகத் தொடர்ந்து அனுபவித்தது நாடுகடத்தல்கள், தொடர் பணியாற்றுதல், இழப்பகள் ஆகியவற்றையே. கடவுளின் அரசாட்சி என்பது அவர்களைப் பொறத்தமட்டில் மிகத் தொலைவில் உள்ளதொன்று. ஆனால் இயேசுவிலே அது நிதர்சனமான, தெளிவான தொன்றாகத் தந்தையாம் கடவுளின் விருப்பத்திற்கு ஆழுமையானக் கீழ்ப்படிதலை அளிப்பவராக, அற்புததான விதத்தில் அளிக்கப்பட்ட உடல் நலன்களாக, தங்கள் நம்பிக்கையும், வாழ்வும் மீட்டெடுக்கப்பட்டவைகளாக அவர்கள் கண்டுக்கொண்டனர். இறையாட்சியல் வேரூன்றிய கிறிஸ்துவ வாழ்வு என்றுமே சோர்ந்துப் போவதில்லை. அது ஒரு சிலிர்ப்பூட்டும் ஒரு சசுகமான

அனுபவம். எனவே மனம் திரும்புதல் எனபது ஒப்புரவு அருட்சாதனங்களை செய்த பாவங்களை அறிக்கையிடுவதுடன் முடிந்துவிடுவதில்லை. -- மாறாக அது தன்னை மையப்படுத்தி வாழ்ந்துக்கொண்டிருக்கும் வாழ்விலிருந்து விடுபட்டு இறைவனை மையப்படுத்திய வாழ்வுக்குத் திரும்புதலாகும்.

**3. துன்பத்தில் உழன்ற நிலத்திற்கு மீட்பு:**

எசாயா இறைவாக்கினர் செபுலோன் நெப்தலி ஆகிய நிலப்பகுதிகளைக் குறித்துப் பேசும் போது அவை காரிருளில் மூழ்கியிருந்ததாகக் கூறுகிறார். அதே நிலப்பகுதியில் தான் பல நூற்றாண்டுகளுக்குப் பின் இயேசுவின் இறையாட்சிப் பணி துவங்குகிறது. தனத நற்செய்தி அறிவிப்புப் பணியை அதே இடத்தில் துவங்குகிறார் இயேசு. தம் பணியை துன்பத்திலும் போராட்டங்களின் மத்தியில் வாழும் மக்களிடமிருந்தே துவங்குகிறார். இருளில் மூழ்கி வாழும் மக்களிடையே, தங்களின் நம்பிக்கைப் பொய்த்துப் போனது என்று அங்கலாப்போடு லாழும் மக்களிடையே துவங்குகிறார். அவர் அவர்களுக்கு ஒளியை, வாழ்வை, மீட்பை அளிக்கிறார். ஆம் இயேசு என்னும் அரசரைக் காண எண்ணிய மூன்று ஞானிகளை விண்மீன் தன் ஒளியால் அவாகைள வழிநடத்தி இறுதியில் புதிதாகப் பிறந்துள்ள கிறிஸ்துவை அவர்களுக்கு சுட்டிக் காட்டியதைப் போன்று இருளின் அறியாமையில் வாழ்ந்த மக்களுக்கு கிறிஸ்து என்னும் ஒளி பிறந்தது.

இறைவன் தரும் மீட்பைக் கண்டுணரும்போது மனமாற்றம் / மனம் திரம்புதல் இயல்பாகவே நம்முள்ளிருந்து ஊற்றாகப் பெருக்கெடுக்கும். யோவானைப் போல இயேசு மனிதரின் பாவங்களுக்கு தண்டனையோ அபராதமோ விதிக்கவில்லை. அவர் விரும்புவதெல்லாம் அவர் மீது நமிபிக்கைக் கொண்டு அவரைப் பின்பற்றுவதைத் தான். நம்மிடையே நிலவும் அவரது பிரசன்னம் நமது அவநம்பிக்கைகளை நம்பிக்கையாக, நமது பயங்களை துணிச்சல்களாக, நமது பாவங்களை மன்னிப்பாக மாற்றவல்லது.

நமது முதல் சீடரை அழைத்தல்: பேதுரு, அந்திரேயா, யாக்கோபு, யோவான் இயேசுவிடம் முதல் சீடராக இணைகிறார்கள். அவர்கனது வாழ்வு உடனடியாக மாற்றம் பெறுகிறது. அவர்களது வாழ்வாதாரமான மீன்பிடி உபகரணங்களை, இதுகாறும் வாழ்ந்த அன்றாட வாழ்வியலைத் துறந்து இயேசுவை மட்டுமே பின்பற்றினர். அந்த சீடர்கள் இயேசுவின் அழைப்பை ஏற்ற விதம் நமக்கு சீடத்துவம் குறித்த செய்தியைக் கற்பிக்கின்றது. அதாவது அழைப்பை உடனடியாக ஏற்றல், அர்ப்பண வாழ்வு, குன்றாத இறை நம்பிக்கை ஆகியவற்றை நமக்கு உணர்த்துகிறது.

**4. பவுல்திருஅவைக்கு வழங்கிய அவசர நினைவூட்டல்:**

திருத்தூதர் பவுல் கொரிந்து சபைக்கு எழுதிய மடலின் வாயிலாக சில முக்கியமான உண்மைகளை நமக்கும் நினைவூட்டுகிறார். அதாவது கிறிஸ்துவை பிளவுப்படுத்தக் கூடாது. பவுலடியாரின் உணாடவுபபூர்வமான ஒரு வழிநடத்துதல் கொரிந்தில் இல்லாமல் போனதால், அங்கு மக்களிடையே சண்டை சச்சரவகளும் பிளவுகளும் ஏற்பட்டன. இன்றும் நமது மனித இயல்பும், நாம் சார்ந்துள்ள அமைப்புகளில் எழும் சில சவால்களும் நம்மிடையே பிரிவுகள், பிளவுகளை உண்டாக்குகின்றன. ஆனால் நமது நோக்கம் கிறிஸ்துவிலும் அவரது செய்திகளிலும் தான் இருக்க வேண்டுமேத் தவிர நமது சொந்த கௌரவம் பெறுமை ஆகியவற்றிலோ நமது சொந்த விருப்புகளை நிறைவேற்றிக் கொள்வதிலோ இருக்கக் கூடாது.

நமது பணியிள் போது நமக்குள் ஏற்படக்கூடிய குழப்பங்கள், உரையாடல்கள், மாற்றுக் கருததுக்கள் எழலாம். ஆனால் அவை அனைத்தும் இறையரசு சார்ந்ததாக அமைய வேண்டுமேத் தவிர நமது சொந்த விருப்பு வெறப்புக், ஏற்றுக் கொள்ளா நிலை என்பது அதில் இருத்தலாகாது. சிடத்துவம் என்பது கிறிஸ்வுக்கு அனைத்திலும் விசுவாசமாக நேர்மையான உள்ளத்தோடு இருப்பதில் தான் அடங்கியுள்ளதே தவிர அதில் மனித திட்டங்களுக்கு இடமிருத்தலாகாது.

**5. ஒவ்வொரு துவக்கத்திலும் தோன்றும் ஒரு வலிமை:**

ஹெர்மன் ஹெஸ்ஸெ என்னும் அறிஞர் "ஒவ்பொரு செயலின் தவக்கமும் தன்னுள்ளே ஒருவிதமான சக்தியைக் கொண்டுள்ளது அது நம்மைப் பாதுகாத்து நாம் வாழ்வதற்கு உதவி செய்கிறது" என்கிறார்.
இயேசுவின் பொது வாழ்க்கைக் கோட்பாடுகளின் அடிப்படையில் தவக்கப்படவில்லை. மாறாக அது சீடத்துவம் என்னும் உறவை அடித்தளமாகக் கொண்டு துவங்குகிறது. அவர் எளிமையான மீன்பிடித் தொழிலை செய்துக் கொண்டிருந்த மனிதில் இருந்த கூடிப் பணி செய்யும் திறனையும் அவர்களது திறந்த உள்ளத்தையும் கண்டு அவர்களைத் தம் சீடராக அழைத்தார். அவர் அவர்களிடம் "நீங்கள் எதையும் செய்யக் கூடிவர்கள் ஏனெனில் நீங்கள் தனியாக

இருக்கவில்லை" என்கிறார். கிறிஸ்து சீடலை அழைத்தல் என்பது நமக்கு எதை நிழைனவூட்டுகிறது என்றால் இறைநம்பிக்கை உறவுகில் தான் மலருகிறது. அதாவது இயேசு கிறிஸ்துவின் மீதான நம்பிக்கை, நம்மோடு அழைக்கப்பட்டு நம்முடன் இணைந்து பயணிக்கப் போகிறவர்கள் மீதான நம்பிக்கையோடு தான் அது துவங்ககிறது.

மீன்களைத் தன்னுள்ளே இருத்திக் கொள்ளும் வலையைப் போல அழைக்கப்பட்டோர் இநை்திருத்தல் மிகவும் அவசியம். ஒரு சமூகமாக இணைந்து செயல்படாத கிறிஸ்துவரின் வாழ்க்கை நிறைவற்ற வாழ்வாகவே இருக்கும். நாம் இறையொளியை மற்றவருக்கு வழங்கும் ணியை இணைந்திருந்து செயல்படுத்தும் போது நாம் வலிமையோடும் நற்பயை அளிக்கும் விதமாகவும் செயலாற்ற இயலும்.

6. வலையை வீசுதல்:

மேலே சொல்லப்படட உவமையில் வரும் சர்க்கஸ் கலைஞர் தான் அறியாதவற்றில் கால் பதித்தது போன்று அழைக்கப்பட்டுள்ள நாமும் இறை நம்பிக்கையோடு அவரது அழைப்பை பின்பற்றிக் கால் பதிப்போம். இயேசு சாமான்ய மக்களை அழைத்து மிக உயரியப் பணியை செய்ய செய்யப் பணிக்கிறார். அது மனிதரை, அவர்களது வாழ்வை, மீட்டெடுக்கும் ஒரு வலையை உருவாக்கும் பணி. அது ஆன்மீகவிதமாவும், மக்களால் நடைமுறை வாழ்வில் செயல்படுத்தக் கூடியதாகவும் அமைந்திருக்க வேண்டும். இப்பணியை யாரும் தனித்திருந்து செய்ய வரும்பவில்லை இயேசு. அவரைப் பின்பற்றிச் செலலுத் வலையே திருஅவை. அந்த வலையே அழிவின் பாதையில் வீழ்ந்துவிடக் கூடிய மக்களை தன்னுள் சேர்த்துப் பிணைத்துக் கொள்கிறது.

நமது வலைகள் -- நமது சமுதாயங்கள். நமது பங்குத் தளங்கள், நாம் ஒருவரக்கொருவர் அளித்துக் கொள்ளும ஆதரவு ஆகியவையே. நாம் செய்யும் விசவாசத்துடனான இரக்கச் செயல்கள், நமது செபங்கள் நமது இறைநம்பிக்கை ஆகியவையே நமது வலையில் உள்ள இழைகள்.

7. நெப்தலி. செபலோன் நிலப்பகுதிகள் நமக்களிக்கும் பாடம்:

பொதுவாக எதிலாவது வெற்றிப் பெறவதற்கு விளிம்பு நிலையை விட்டு விட்டு மைப்பகுதிக்கு, அதாவது ஆதிக்கமும் அதிகாரமும் உள்ள இடத்தை நோக்கி நகருதலாகும். ஆனால் இயேசுவின் தேர்வு முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது. அவர் தேர்ந்துக் கொண்ட இடம் தவறுதலான இடம், தேர்ந்தக் கொள்ளப்பட்டவர்கள் தவறிழைத்த மக்கள், மொத்தமாகப் பார்க்கப் போனால் செய்யவே முடியாது என்று எண்ளக் கூடிய பணியையே அவர் தேர்ந்துக் கொள்கிறார்.

ஒளியைக் கொண்டு வர அவர் இருளில் தம் பணியைத் துவங்குகிறார். அதுபோன்று நாமும் உலகின் மூலைமுடுக்களில் எல்லாம் கிறிஸ்துவின் ஒளியை ஏற்றிட அழைக்கப்படுகிறோம். அது மக்களால் ஒதுக்கி வைக்கப்பட்ட, மக்களாக/குடும்பங்களாகவோ. மறக்கப்பட்ட மக்கள் சமூகமாகவோ இருக்கலாம் அல்லது கவனிப்பாற்றுக் கிடக்கும் பணித்தளங்களாக இருக்கலாம். ஆனால் கடவுள் யாரையும் தம் பணியில பயன்படுத்தி தமது அரசைக் கட்டியெழுப்பச் செய்ய வல்லவர். மனமாற்றமும், இயேசுவைப் பின்பற்றி நடததலும் எப்படிப்பட்ட சாதாரண மனிதலையும் அவரது மாட்சியைப் பறைசாற்றப் பயன்படும் கருவியாக அவரல் மாற்ற முடியும்.

8. இருளும் ஒளியும்:

இருள் பல வடிவங்களில் நம்மைச் சூழ்ந்துக் கொள்ளலாம். அது இறப்பாக, வியாதியாக, பொதைக்கு அடிமையாதலாக, நம்பிக்கையின்மையாக நம்மை வந்தடையலாம். ஆனால் இயேசுவின் ஒளி எத்தகைய இருளின் நிழலிலும் ஒளிரக் கூடியது. அவர் நமக்கு குணமளிக்கிறார், மன்னிக்கிறார், நம்மை புதுப்பிக்கிறார். இந்த ஒளியை நாம் அனைவரும் நமதுத் திருமுழுக்கில் அவரிடமிருந்துப் பெற்றுக் கொள்கிறோம். அதை நாம் மற்றவரக்கும் வழங்க வேண்டிய கடமையும் நமக்குண்டு.

நாம் கிறிஸ்துவைப் பின்பற்றிச் செல்லும் ரோது இயேசுவின் ஒளியை உலகில் எந்தி வருகிறோம். இயேசுவின் சீடர் தஙகள் வலைகளை விட்டுவிட்டு இயேசுவின் பின்னே வந்ததுப் போன்று நாமும் இயேசசவின் வல்லமையில் நம்பிக்கை வைத்து நமது சமூகத்தின் ஆதரவோடு அவரது பணிசெய்யக் கால் பதிப்போம். நாம் என்றுமே தனித்து விடப்படுவதில்லை.

**9. இறைஙழைத்தல்: இன்றே அழைத்தலைக் கேட்போம்.**

இறையழைத்தல் என்பது ஒரு மனிதனின் பிழைப்பிற்கான வழியல்ல அதாவது அது ஒரு தொழில் அ்ல்ல. அது ஒரு அழைததல். ஒவ்வொரு மனிதரும் அவரது பணியில் பங்கேற்பதற்காக இயேசு வழங்கும் அழைப்பு. இன்றும் இயேசு பல்வேறு வாழ்வுச் சூழல் வழியாக, சக மனிதர்கள்மூலமாக, உலகத் தேவைகள் உணரப்படும் போதும் நம்மை அனைத்து வகையான மனிதரையும் தம் பணிக்கென அழைக்கிறார். நாம் அந்த அழைப்பிற்கு செவி மடுக்க வேண்டும். அழைப்பை மதிக்க வேண்டும். அதை ஏற்று நமது பழைய வலைகளை (வாழ்வை) விட்டு விட்டு வெளியே வர தயாராக இருக்க வேண்டும்.

அழைப்பு என்றோ முடிந்துவிடக்4டியதல்ல. அது தொடர்ந்து நிகழும் செயல். அழைக்கப்படும் விதங்கள் ஒருவேளை மாறலாம். ஆனால் அழைப்பு என்றும் மாறாதது. நாம் செய்யும் ஒவ்வொர பணியும், இறைவேண்டல்கள், நமது நேர்மையான நம்பிக்கை ஆகிய அனைத்துமே இவ்வுலகில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இறையாட்சியை பறைசாற்றி தங்கள் பங்கை அளிக்கிறனர்.

மீண்டும் நாம் அந்த சர்ககஸ் இளைஞனிடம் வருவோம். அவனது சறுக்கல் சற்று பலமானதாகவே இருந்தது. அவன் கீழே விழுந்துவீட்டதாகவே கருதப்படும் நிலையை எட்டிவிட்டான். ஆயினும் அவனது தந்தை தக்கத் தருணததில் அவனை எந்திப் பிடித்த வரை அவனைக் காப்பாற்றியது. இன்று இயேசு நாமும் அவரது சீடத்துவத்தில் கதர் பதிக்க வேண்டும் என்று அழைக்கிறார், அவரது இறையாட்சி என்னும் ஒளிக்குள் நுழைந்திட அழைக்கிறார். நாம் ஒருவேளை இடறலாம் தள்ளாடலாம், நம்மிடமுள்ள வலுவின்மையை, நம்மிடமுள்ள பற்றாக்குறைகளை உணர நேரிடலாம். ஆனால் நம்மைத் தாங்கிக்கொள்ள நம்முடன் பயணிப்பவர் நம்மை பின்னிப் பிணைந்திருக்கும் நமது சமூகத்தின் வழியாக, அவர்களின் அன்பின் வழியாக, இறைநம்பிக்கை வழியாக நம்மோடிருப்பவர் இயேசு. அவர் நம்மைத் தாங்கிப் பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கிறார்.

நாம் துணிவுக் கொள்வோமாக. நமது தவறுகளுக்காக மனம் வருந்துவோமாக. அவரைப் பின்பற்றுவோமாக. இணைந்துப் பணியாற்றி இறைவனின் ஒளியைக் கொண்டு சூழ்ந்துள்ள இருளை அகற்றுவோமாக. இதை நாம் ஒவ்வொருப் படியாக நகர்த்தி ஒவ்வொரு சிறிதான துவக்கங்களின் வழியாக செயலாற்றி நம் வழியாக இறைவனின் ஒளி உலகில் ஒளிர்ந்திடுவதாக ஆமென்.